## நிதிநிலை அறிக்கை – வேளாண் நிதிநிலை அறிக்கையை

# தொலைக்காட்சி - ஊடகங்கள் மூலம் 2 கோடி பேர் அறிந்திருக்கின்றார்கள்!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தகவல்!

சென்னை, மார்ச் 21 - சட்டப்பேரவையில் அ.தி.மு.க. உறுப்பினர் ஆ. அருண்மொழி தேவன் பேசுகையில் அமைச்சர் மு. பெ.சாமிநாதன் குறுக்கிட்டு பேசும்போது நிதிநிலை அறிக்கை, வேளாண் பட்ஜெட்டை தொலைக்காட்சி - ஊடகங்கள் மூலம் இரண்டு கோடி மக்கள் அறிந்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்.



அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பேசியதாவது: -

கடந்த நிதிநிலை அறிக்கை செய்தியானாலும் சரி, வேளாண் நிதிநிலை அறிக்கை செய்தியானாலும் சரி, ஒவ்வொன்றிலும் இரண்டு கோடி மக்கள் இந்த செய்தியை தொலைக் காட்சி மூலமாக, வாட்ஸ் ஆப் போன்ற சமூக ஊடகங்கள் மூலமாக அறிந்திருக்கிறார்கள். நான் சொல்வது குறைந்தபட்ச எண்ணிக்கை. வாட்ஸ் ஆப் மூலமாக, சமூக ஊடகங்கள் மூலமாக இரண்டு கோடி மக்கள் பார்த்து என்பதுதான் அதிகபட்சமான பொதுமக்கள் பார்த்த நிதிநிலை அறிக்கை, வேளாண் நிதிநிலை அறிக்கை (மேசையைத் தட்டும் ஒலி).

இவ்வாறு அமைச்சர் மு. பெ.சாமிநாதன் பதிலளித்தார்.

## நீதிமன்ற வழிகாட்டுதலின்படி – தடை விதிக்கப்பட்ட

# 6 கல்லூரிகள் விரைவில் தொடங்கப்படும்!

## பேரவையில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

**சென்னை, மார்ச் 21 – தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நேற்று முன்தினம் (19.03.2025) வினா - விடை நேரத்தின் போது, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள், திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் எஸ். சந்திரன், ஆலங்குளம் சட்டமன்ற உறுப்பினர் பால் மனோஜ் பாண்டியன், பழனி சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி.செந்தில் குமார் ஆகியோர் எழுப்பிய வினாக்களுக்கு பதிலளித்தார்.**

**திருத்தணி எஸ்.சந்திரன்:** திருத்தணி தொகுதியில் இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் அரசு மகளிர் கலைக்கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** இந்து சமய அறநிலையத்துறை அறம் சார்ந்த பணிகளிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்திற்காக புதிதாக திராவிட மாடல் ஆட்சி நாயகன் பதவி ஏற்றவுடன் துறையின் சார்பில் 10 கல்லூரிகள் அமைக்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டார். இந்த அறிவிப்பை பல்வேறு வகையில் தடுக்கின்ற நோக்கத்தோடு நீதிமன்றங்களில் வழக்குகள் கொடுக்கப்பட்டு வந்தன. பல்வேறு சட்ட போராட்டங்களுக்குப் பிறகு நான்கு கல்லூரிகளுக்கு அனுமதி பெறப்பட்டு தமிழக முதல்வர் அவர்களின் கொளத்தூர் சட்டமன்ற தொகுதியிலும், உணவுத்துறை அமைச்சர் ஒட்டன்சத்திரம் தொகுதியிலும், சட்டப் பேரவை உறுப்பினர் ஈஸ்வரன் திருச்செங்கோடு தொகுதியிலும், சட்டப் பேரவை உறுப்பினர் மார்க்கண்டேயன் விளாத்திக் குளம் தொகுதியிலும் கல்லூரிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

நீதிமன்ற வழக்கினால் 6 கல்லூரிகளுக்கு தடை விதிக்கப்பட்ட நிலையில் தற்போது நீதிமன்றம் ஒரு சில வழிகாட்டுதல்களை தெரிவித்துள்ளது. அந்த வழிகாட்டுதலின் அடிப்படையில் 6 கல்லூரிகளையும் இந்த ஆண்டிற்குள் தொடங்குவதற்கான நல்ல சூழலை உருவாக்கிய பிறகு நிச்சயம் திருத்தணிக்கும் ஒரு கல்லூரி ஏற்படுத்தி தரப்படும். சட்டப்பேரவை உறுப்பினர்கள் ஜி. கே.மணி, நயினார் நாகேந்திரன் போன்றோர் இது போன்ற கோரிக்கையினை வைத்துள்ளனர். முதல்வர் அவர்களை நம்பினோர் இதுவரை கெட்டதில்லை, நம்பாமல் கெட்டவர்களின் எண்ணிக்கை தான் நீண்ட வரிசையாக இருக்கின்றது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**எஸ்.சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கு முடிவடைந்த பிறகு, திருத்தணி சட்டமன்ற தொகுதிக்கு இந்த ஆண்டு முன்னுரிமை அளிக்கப்பட்டு மகளிர் கல்லூரி செயல்படுத்துவோம் என்று தெரிவித்த அமைச்சர் அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பிலே நன்றியை தெரிவித்துக் கொண்டு, இந்த சட்டமன்ற தொகுதியை பொறுத்தவரையில் பள்ளிப்பட்டு, ராக்கிப்பட்டு உள்ளிட்ட வட்டங்கள் திருத்தணி 40 கிலோமீட்டர் தொலைவில் உள்ளதாலும் கிராமப்புற மாணவிகளின் நலனை கருத்தில் கொண்டு அமைச்சர் அவர்கள் இந்த அறிவிப்பினை அளித்திருக்கின்றார்கள். அவருக்கு இந்த நேரத்தில் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டு அறநிலையத்துறையின் சார்பிலே பல்வேறு நல திட்டங்களை தமிழ்நாடு முதல்வரின் தலைமையில் செயல்படுத்தக்கூடிய அமைச்சர் அவர்கள் திருத்தணி முருகப்பெருமானின் ஆசியை முழுமையாக பெற்றிட அவருடைய இந்த அறிவிப்பு உதவி புரியும் என்று தங்கள் வாயிலாக தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** உறுப்பினர் அவர்கள் புத்திசாலித்தனமாக கோரிக்கையை நிறைவேற்ற முற்படுகின்றார். வரவேற்கிறேன். சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையில் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட 6 கல்லூரிகளையும் பயன்பாட்டிற்கு கொண்டு வந்த பிறகு அவரது கோரிக்கையை பரிசீலித்து கல்லூரி ஏற்படுத்தப்படும் என்றுதான் அறிவித்திருக்கின்றேன். அதோடு மட்டுமில்லாமல் முருகப்பெருமான் ஆசி முழுவதுமாக கிடைக்கும் என்று சொல்லியிருக்கின்றார். தமிழ் கடவுள் முருகனுக்கு மாநாடு எடுத்த ஒரு ஆட்சி உண்டென்றால் அது திராவிட மாடல் ஆட்சியாகும். ஆகவே தமிழ் கடவுள் முருகப்பெருமான் முதல்வர் அவர்கள் தலைமையிலான இந்த ஆட்சிக்கு முழுவதுமாக ஆசி வழங்கி கொண்டு இருக்கிறார் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**எஸ்.சந்திரன் :** முருகப் பெருமானின் வாகனம் மயில் என்று கூறப்பட்டாலும், இந்திரன் முருகனின் திருமணத்திற்கு வழங்கப்பட்ட ஐராவத யானை இத்திருத்தலத்தின் வாகனமாக புராணங்களில் கூறப்பட்டுள்ளதால் திருத்தணி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு யானை ஒன்று வழங்கிட அரசு முன்வருமா என்பதனை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு :** அத்திருக்கோயிலுக்கு ஏற்கனவே 1981 ஆம் ஆண்டு தேவர் பிலிம்ஸ் சார்பில் ஒரு யானை வழங்கப்பட்டது. அந்த பெண் யானை வள்ளி 2010 ஆம் ஆண்டு இறந்துவிட்டபடியால், அந்த யானைக்கு திருக்கோயிலில் மணிமண்டபம் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கின்றது. கிரிதரன் என்பவர் யானையை வாங்கி தானமாக வழங்கிட முன் வந்தார். இந்திய வனத்துறையின் சட்டம்



1972 -ன் படி யானை வாங்குவதற்கு தடை ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. அதை தொடர்ந்து 2023 ஆம் ஆண்டு மாண்பமை உயர்நீதி மன்றத்தின் முதன்மை அமர்வு யானைகளை காட்டிலிருந்து நேரடியாக கொள்முதல் செய்யக்கூடாது என்று உத்தரவு பிறப்பித்து இருக்கின்றது. உயர்நீதிமன்ற மதுரை கிளையானது திருக்கோயிலுக்கு யானைகள் யாரும் வாங்க கூடாது என்று சுற்றறிக்கை அனுப்பிட அரசு செயலருக்கு உத்தரவிட்டிருந்தது. இந்து சமய அறநிலையத்துறை பொறுத்த அளவில் இந்த இரண்டு வழக்குகளிலும் தமிழக முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நூறு ஆண்டு களுக்கு மேலாக திருக்கோயில்களின் வழக்கத்தில் யானைகள் தெய்வத்திற்கு நிகராக போற்றப்படுவதால், அவற்றின் முக்கியத்துவத்தை இரண்டு நீதிமன்றங்களி லும் நாங்கள் மனுவாக தாக்கல் செய்திருக்கின்றோம். நீதிமன்ற உத்தரவு கிடைக்கப் பெற்றவுடன் அவர் கோரிய அந்த திருக்கோயிலுக்கு யானை நிச்சயமாக உபயதாரர்களால் வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**பால் மனோஜ் பாண்டியன் :** அமைச்சர் அவர்கள் 2021 ஆம் ஆண்டு என்னுடைய கோரிக்கையை ஏற்று ஆலங்குளம் தொகுதியில் உள்ள கடையத்தில் கல்லூரியே இல்லாத பகுதிக்கு இந்து சமய அறநிலையத்துறை சார்பில் ஒரு கல்லூரி தொடங்க அனுமதி தந்ததற்கு அவருக்கும் முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்து, அறிவிக்கப்பட்ட 6 கல்லூரிகளில் இதுவும் உள்ளதால் மக்கள் பெரும் எதிர்பார்ப்பாக வைத்திருக்கும் கல்லூரியை அவர் ஏற்கனவே சொன்னது போல இந்த ஆண்டு அமைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுப்பாரா என்பதை தங்கள் வாயிலாக கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு :** கேள்வி கேட்ட உறுப்பினரும் ஒரு சிறந்த வழக்கறிஞர் தான். இந்த 10 கல்லூரிகளை அறிவித்த பிறகு இதற்காக நடத்திய சட்டப் போராட்டங்கள், நீண்ட நெடிய நீதிமன்ற படிக்கட்டியிலேயே நாங்கள் ஏறி இறங்கியது கொஞ்ச நஞ்சமல்ல. அதற்கு காரணமானவர்களும் இதே அவையில் தான் இருக்கின்றார்கள். முதல்வர் அவர்கள் தற்போது நான்கு கல்லூரிகளை செயல்பாட்டிற்கு கொண்டு வந்திருக்கின்றார். நினைத்ததை நினைத்தபடி நடத்தி முடிக்கின்ற ஆற்றல் பெற்ற எங்கள் முதல்வர் அவர்களின் சொன்னதைத்தான் செய்வோம் செய்வதைத்தான் சொல்வோம் என்ற வார்த்தைக்கு இணங்க உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நிறைவேற்றுவதற்கு அனைத்து வகையிலும் முயற்சியினை இந்த ஆட்சி எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஐ.பி. செந்தில்குமார் :** நம்முடைய திராவிட மாடல் அரசு அமைந்தவுடன் பழனியில் சித்த மருத்துவக் கல்லூரி அமைக்கப்படும் என்று அறிவிப்பு வெளியிடப்பட்டு அதற்கு 38 ஏக்கர் நிலம் எடுக்கப்பட்டிருக்கிறது. ஒன்றிய அரசின் வழிகாட்டுதலில் 24 மாதங்களில் சித்த மருத்துவமனை அங்கே இயங்கி இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அந்த வகையில் சித்த மருத்துவமனை 24 மாதங்களை கடந்து இருக்கக்கூடிய சூழலில் சித்த மருத்துவ கல்லூரி அமைப்பதற்கு பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியிருக்கிறது. அந்த பணியாளர்களுக்கு மாத ஊதியம் கொடுப்பதற்கு அந்த எய்டட் அப்ரூவல் பெறுவதற்கான கோப்பு அரசின் கவனத்திற்கு வந்திருப்பதாக அலுவலர்கள் தெரிவித்தனர். அந்த அனுமதியை விரைந்து கொடுத்து அந்த பணிகளை தொடங்கிட வேண்டுமென கேட்டு அமைகின்றேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு :** பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலை பொறுத்தளவில் ஒரு துறையினுடைய நிர்வாகத்தை போல் பழனியில் தண்டாயுதபாணி திருக்கோயில் நிர்வாகம் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. சித்த மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கான இடம் பார்ப்பதற்கு மாவட்ட அமைச்சர்கள் அண்ணன் ஐ.பி. அவர்களும், சக்கரபாணி அவர்களும், சட்டப்பேரவை உறுப்பினர் செந்தில்குமார் அவர்களும் நேரடியாக சென்று ஆய்வு செய்தோம். சித்த மருத்துவக் கல்லூரிக்கு விண்ணப்பித்தவுடன் அனுமதி வழங்குவதற்கு ஒன்றிய அரசு ஒப்புதல் தந்தது. அதற்குண்டான சட்ட விதிமுறைகளின்படி முன்கூட்டியே ஒரு சித்த மருத்துவமனை இயங்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, தமிழக முதல்வர் அவர்களால் 2023 ஆம் ஆண்டு தொடங்கி வைக்கப்பட்டிருக்கின்றது. அதன் தொடர்ச்சியாக துறையினுடைய கோப்புகள் எதுவாக இருந்தாலும் 24 மணி நேரத்தில் அதை நிவர்த்தி செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு முதல்வர் உத்தரவிட்டிருக்கின்றார். என் கவனத்திற்கு எட்டிய வரை உறுப்பினர் அவர்கள் கூறியது போல் எந்த கோப்பும் நிலுவையில் இல்லை. இருந்தால் உடனடியாக இன்றே அதை நிவர்த்தி செய்வோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர் பாபு பதிலளித்தார்.

## துறைமுகம் காஜா தலைமையில் டாக்டர் சுபேர்கான் முன்னிலையில்

# கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில் ரமலான் நோன்பு திறப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரை - கட்சித் தலைவர்கள் பங்கேற்பு!

சென்னை, மார்ச் 21 - கழக சிறுபான்மை நல உரிமைப் பிரிவு நடத்தும் இஃப்தார் புனித ரமலான் நோன்பு திறப்பு நிகழ்ச்சி 24.3.2025 திங்கள் மாலை 4 மணிக்கு திருவான்மியூர் இராமச்சந்திரா கன்வென்சன் ஹாலில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு தலைமை நிலையச் செயலாளர் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத் தலைவர் துறைமுகம் காஜா தலைமை தாங்குகிறார். சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் சுபேர்கான் முன்னிலை வகிக்கிறார்.

கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று வாழ்த்துரை வழங்குகிறார்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் முகைதீன், மனிதநேய மக்கள் கட்சி தலைவர், எம்.எச்.ஜவாஹிருல்லா, முன்னாள் காங்கிரஸ் எம்.பி. சா.பீட்டர் அல்போன்ஸ், தமிழ் மாநில தேசிய லீக் பொதுச் செயலாளர் திருப்பூர் அல்தாப், இந்திய தேசிய லீக் தலைவர் பஷீர் அகமது, மனிதநேய ஜனநாயக கட்சி தலைவர் தமிமுன் அன்சாரி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சட்டமன்ற உறுப்பினர் ஆளூர் ஷா நவாஸ்,

தமிழ்நாடு அரசு துணை முதன்மை காஜி முகமது அக்பர் அலி ஷா ஆமிரி, தமிழ்நாடு அரசு தலைமை காஜி (ஷியா) மௌலானா குலாம் முஹம்மது மெஹந்திகான், தலைமை இமாம் மந்தைவெளி ஈத்கா பள்ளி வாசல் மௌலானா கே.எம். இல்யாஸ் ரியாஜி சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலன் துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், பேராசிரியர் டாக்டர் முஹம்மது ரோஸா, கே.நபாஸ்கனி எம்.பி., ஜோ அருண் (தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையம்)

கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி, தலைமைக் கழக செய்தி தொடர்புத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, தயாநிதிமாறன் எம்.பி., தலைமை நிலையச் செயலாளர் பூச்சி முருகன், தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு.

மேயர் பிரியா ராஜன், கலாநிதி வீராசாமி எம்.பி. துணை மேயர் மு.மகேஷ்குமார், பகுதிச் செயலாளர் துரைகபிலன், துணை அமைப்புச் செயலாளர் எஸ்.ஆஸ்டின், அசன் மவுலானா எம்.எல்.ஏ..

வட்டச் செயலாளர் ராஜாராமனன் மற்றும் சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

## சென்னையில் – மகளிர் சுய வேலைவாய்ப்பு பயிற்சி

# 15 மண்டலங்களிலும் மையம் அமைத்திட ரூ.7.50 கோடி ஒதுக்கீடு!

## மேயர் பிரியா – பல்வேறு அறிவிப்புகளுடன் 2025-26க்கான பட்ஜெட் தாக்கல் செய்தார்!

**சென்னை, மார்ச் 21- சென்னை மாநகராட்சி 2025-26 பட்ஜெட்டில் மாணவர்களுக்கு செய்தித் தாள் வாசிப்பு, விளையாட்டு ஊக்கத் தொகை, மகளிர் / சுய வேலை வாய்ப்பு, முதியோர் நலன் உள்ளிட்ட அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.**



பெருநகர சென்னை மாநகராட்சியின் 2025– 26ஆம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கை மேயர் திருமதி ஆர்.பிரியா தலைமையில் நேற்று முன்தினம் (19.03.2025) மாமன்றக் கூட்டரங்கில் தாக்கல் செய்யப்பட்டது. இக்கூட்டத்தில், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ. குமரகுருபரன், நிலைக்குழுத்தலைவர்கள், மண்டலக்குழுத்தலைவர்கள்லவர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சென்னை மாநகராட்சியின் 2025-26 ஆம் நிதி ஆண்டுக்கான பட்ஜெட் கூட்டத்தொடர் நேற்று முன்தினம் 19.3.2025 தொடங்கியது. இதில் மாநகராட்சி மேயர் பிரியா பட்ஜெட்டை தாக்கல் செய்து, பல முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டு உள்ளார்.

அதில் அறிவிக்கப்பட்டுள்ள முக்கிய அறிவிப்புகள் வருமாறு:

### செய்தித்தாள் வாசிப்புப் பழக்கம்:

சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு செய்தித் தாள் வாசிக்கும் பழக்கத்தினை ஊக்குவித்து அதனடிப்படையில் குறிப்புகள் தயார் செய்யவும், வினாடி வினாப் போட்டிகள் நடத்திடவும், அந்தந்த பள்ளியின் தலைமை ஆசிரியரால், தமிழ், ஆங்கிலம் மற்றும் சமூக அறிவியல் பாடங்களின் ஆசிரியர்களைக் கொண்ட ஒரு குழு அமைத்து வினாத்தாள்கள் தயாரித்து, தேர்வுகள் நடத்தப்படும். அவற்றில், வெற்றி பெறும் மாணவ, மாணவியர்களுக்கு பள்ளி மற்றும் மண்டலம் அளவிலான போட்டித் தேர்வுகள் நடத்தப்பட்டு வெற்றி பெறுபவர்களுக்கு பரிசுகளும், சிறப்பாகப் பணியாற்றிய ஆசிரியர்களுக்கு ஊக்கத் தொகையும் வழங்கப்படும். இதனை மேற்கொள்ளும் வகையில் பள்ளி ஒன்றுக்கு ரூ.15,000/- முதல் ரூ.75,000/-வரை 211 பள்ளிகளுக்கு ரூ.86.70 லட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

### வளமிகு ஆசிரியர் குழு அமைத்தல்:

சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில், காலாண்டு மற்றும் அரையாண்டுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் பள்ளிகளைக் கண்டறிந்து, அப்பள்ளிகளில் விருப்பத்துடன் பணியாற்ற விரும்பும் ஆசிரியர்களைக் கொண்டு, மண்டலம் வாரியாக "வளமிகு ஆசிரியர் குழு" (Pooling of Resource Teachers) அமைக்கப்படும்.

மேலும் விளையாட்டில் சிறந்து விளங்கும் மாணவ, மாணவியர்களைத் தேர்வு செய்து, அவர்கள் தடகளம் மற்றும் குழுப்போட்டிகளில் மண்டலம், மாவட்டம் மற்றும் மாநில அளவிலான போட்டிகளில் பங்கு பெறும் போது மாணவ மாணவியருக்கு பயணம் மற்றும் உணவுப்படியாக நாள் ஒன்றுக்கு தலா ரூபாய் 500/- வீதம் மொத்தம் 62.55 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

### மகளிருக்கு சுய வேலை வாய்ப்பு:

மகளிருக்கு சுய வேலை வாய்ப்பை ஏற்படுத்திடும் வகையில், இதற்கென உள்ள வழிகாட்டு நெறிமுறைகளின் படி, (Standard Operating Procedure) திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளான தையல் பயிற்சி, எம்பிராய்டரி, ஆரி வேலைப்பாடுகள் மற்றும் கணினிப் பயிற்சிகள் (Tally) இலவசமாக வழங்கிட, ஒவ்வொரு மண்டலத்திலும் ஒரு மையம் அமைத்திட, மண்டலம் ஒன்றுக்கு ரூ.50 லட்சம் வீதம் 15 மண்டலங்களுக்கு ரூ.7.50 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

### பெண்கள் – முதியோர் நலன்:

பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் 140 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள், 140 நகர்ப்புற சுகாதார மற்றும் நல மையங்கள், 16 சமுதாய நல மையங்கள், 1 தொற்று நோய் மருத்துவமனை, 2 பகுப்பாய்வு மையங்கள், 3 மகப்பேறு மருத்துவமனைகள் மற்றும் புளியந்தோப்பில் உள்ள 1 காச நோய் மருத்துவமனை ஆக மொத்தம் 303 சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகிறது. இவற்றின் மூலம் தாய் சேய் நல சேவைகள், தொற்று மற்றும் தொற்றா நோய்களுக்கான சிகிச்சை வசதிகள், தடுப்பூசி சேவைகள், அவசரகால சேவைகள் மற்றும் ஆய்வக சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது. தற்பொழுது மூட்டு வலி, எலும்பு, தசை சம்மந்தப்பட்ட நோய்கள் மற்றும் மன நலம் சார்ந்த நோய்களுக்கான சிகிச்சை பெற வரும் முதியோர்களின் எண்ணிக்கை அதிகமாகி வருகிறது. ஆகவே, முதியோர்களின் நலன் பேணும் வகையில் முதியோர் நலப் பிரிவுகள் தொடங்குவது அவசியமாகிறது.

### வெறிநாய்க்கடி தடுப்பூசி:

பெருநகர சென்னை மாநகராட்சியில் தெரு நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்தவும், வெறிநாய்க்கடி நோய் பரவுவதைத் தடுக்கவும் நாய் இனக் கட்டுபாட்டு விதிகள் 2023-க்குட்பட்டு தெருக்களில் பிடிக்கப்படும் நாய்களுக்கு இனக்கட்டுபாடு அறுவை சிகிச்சை மற்றும் வெறிநாய்க் கடி தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கீட்டின்படி சென்னையில் சுமார் 1.80 லட்சம் தெருநாய்கள் இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. வெறிநாய்க்கடி நோயைத்

தடுக்கும் பொருட்டு அனைத்து தெருநாய்களுக்கும் வெறிநாய்க்கடி தடுப்பூசி போடுவது அவசியமாகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியில், தமிழ்நாடு விலங்குகள் நல வாரியம் மற்றும் விலங்குகள் நல ஆர்வலர்களின் ஒத்துழைப்புடன் ரூ.3 கோடி செலவில் 1.80 லட்சம் தெரு நாய்களுக்கு வெறிநாய்க்கடி நோய்த் தடுப்பூசி மற்றும் ஒட்டுண்ணி நீக்கும் மருந்து செலுத்தப்படும்.

### தகவல் தொழில்நுட்பம்:

பெருநகர சென்னை மாநகராட்சியில் பல்வேறு பணிகள் நடைபெறுகிறது. இப்பணிகளை செய்யும் அலுவலர்கள் செயல்திறன் மிக்க வகையில் செயல்படவும், பொது மக்களுக்கு பல்வேறு சேவைகளை விரைவாகவும், எளிதாக அணுகக் கூடிய வகையிலும் வழங்குவதில் மாநகராட்சி பல முக்கியமான சவால்களை எதிர்கொள்கின்றது. தற்போது இணையதளங்கள் மற்றும் பயன்பாட்டில் மொபைல் உள்ள செயலிகளை பயன்படுத்துவோர் மிகுந்த சிரமம் அடைகிறார்கள். உலகளவில் மிகப் பெரிய பயனர் அடிப்படையைக் கொண்டுள்ள வாட்ஸ் அப் (WhatsApp) பயன்பாட்டு தளத்தைப் பயன்படுத்தி, இந்த இடைவெளியை நிரப்புவதன் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி, ஒரு நவீன மற்றும் திறன்வாய்ந்த சேவைகளை செயல்படுத்தி அதற்கான தீர்வை வழங்க முடியும்.

### வாகன நிறுத்துமிடம்:

சென்னை வளர்ந்து வரும் மாநகரமாக உயர்ந்துள்ளது. மிகை அளவிலான வணிக நிறுவனங்கள், கடைகள் பெருகிவருவதால், பொது மக்கள் தங்கள் வாகனங்களை போக்குவரத்து நெரிசல் இல்லாத இடத்தை கண்டறிவதில் சிரமம் ஏற்படுகிறது. இதனால் பேருந்து வழித்தடங்கள், நடைபாதைகள் ஆகிய இடங்களில் வாகனங்கள் நிறுத்துமிடமாக உபயோகப்படுத்தப்படுகிறது. இதனால், போக்குவரத்து நெரிசலும், பாதசாரிகளுக்கு நடந்து செல்வதில் சிரமமும், பாதுகாப்பின்மையும் ஏற்படுகிறது. இதனைத் தவிர்க்க சாலையோரங்களில் போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்படாமல் வாகன நிறுத்துமிடத்தை (Smart Parking) கண்டறிவதற்கு செயலி ஏற்படுத்த வேண்டியது அவசியமாகிறது. இதனை பொது மற்றும் தனியார் பங்குதாரர்கள் (Public Private Partnership) முறையில் செயல்படுத்தி, பொதுமக்களுக்கு பாதுகாப்பான வாகன நிறுத்துமிடத்தை அறிந்து கொள்ளவும், முன்பதிவு செய்துஉபேயோகப்படுத்தவும் இயலும். இதனால் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வருவாயும் கிடைக்கும். பெருநகர சென்னை மாநகராட்சியின் சிறந்த வாகனப் போக்குவரத்து மேலாண்மைக்காக, டிஜிட்டல் முறையில் ஸ்மார்ட் பார்க்கிங் வசதி பொது மற்றும் தனியார் பங்களிப்பு (Public Private Partnership) முறையில் அமைக்கப்படும். இதனால், வாகன நெரிசல்கள் குறைவதுடன் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு கூடுதல் வருவாய் ஏற்படுத்தப்படும்.

### புதிதாக QR Code வசதி:

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு, பொதுமக்கள் எளிய வழியில் வரி செலுத்துவதற்கு ஏதுவாக பல்வேறு வழிவகைகள் செய்யப்பட்டுள்ளதன் அடிப்படையில், தற்போது கூடுதலாக QR Code வசதி ஏற்படுத்தித் தருதல். சொத்து வரி மதிப்பீடு, பெயர் மாற்றம் திருத்தத்திற்கான இறுதி ஆணை அறிவிப்பு, புதிய மற்றும் புதுப்பிக்கும் தொழில் உரிமங்கள், தொழில் வரி வழங்கும் அறிவிப்புகளுக்கு புதிதாக QR Code வசதி ஏற்படுத்தப்படும். இதனால், எவ்வித சிரமும் இன்றி உடனடியாக வரிகளை செலுத்த இயலும் உள்ளிட்ட முக்கிய அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.